# நாராயணன் நாற்பது

செய்தாய் பாலகனாக இருந்து பலபல மாயங்களுமே
கொய்தாய் இலங்கை வேந்தனின் தலைகள் பத்துமே;
எய்தாய் ஓர் அம்பினை ஏழுமரங்களைச் சாய்த்திடவே- என்றும்
11 பெய்வாய் மழையென அன்பை என்தன் மேலுமே.

மேலும்மேலும் துன்பங்களை நீ தந்திட்டாலும்
வேலும்சூலும் கொண்டவர்களை என்மனம் நினையாதே!
நாளும் திருமாலே உன்தனையன்றி வேறு - தேவதைகள்
12 தாளும் என்மனம் என்றும் நாடாதே !

நாடாதே மனமே வேறொருவரை மாலையன்றி
பாடாதே வாயே வேறொன்றும் அவன் நாமமன்றி
கேளாதே காதுகளே வேறொன்றும் அவன்பாடலன்றி--மறந்தும்
13 ஓடாதே கால்களே மற்றொன்று அவன்தலமன்றி!

தலமாகும் திருமால் உறைகின்ற இடமெல்லாம்
நலமாகும் அவனை நினைந்து செய்யும் செயலெல்லாம்
வளமாகும் அவன் இருக்கும் இல்லமெல்லாம் - என்றும்
14 பலமாகும் நம் வாழ்விற்கு அவன் நாமமெல்லாம்!

நாமமெல்லாம் சொல்லி உன்னைத் துதிப்போர்க்கு
சேமமெல்லாம் அளித்திடுவாய் நாராயணனே
காமக்குரோத லோபங்களை மனதிலிருந்துவிரட்டி --உன்தன்
15 நாமமொன்றையே தினமும் உரைத்திடச் செய்வாயே.

“பொய்கையடியான்”



வாய்தனில் ஏழுலகையும் காட்டியே மகிழ்ந்தாய்
தாய்போல் வந்தவளை முலை உறிஞ்சிக் கொன்றாய்
வேய்ங்குழல் வாய்வைத்து ஆனிரை காத்தாய் -- இந்த
16 சேய்தனையும் பொருட்டாக்கி என்மனம் சேர்ந்தாய்.

சேர்ந்தாய் ஆயர்பாடிக்கு மறைவிடம் வேண்டி
கிளர்ந்தாய் ஆழ்கடலிலிருந்து பூமிகாக்க வேண்டி
பிளந்தாய் இரணியன் மார்பை பாலகனுக்கு வேண்டி - வாமனனாய்
17 அளந்தாய் மூவுலகையும் இந்திரனுக்காக வேண்டி !

வேண்டிய பலன்களை பக்தருக்கருளும் திருமாலே
சீண்டிய அரக்கனைக் கொன்றாய் நீயும் அரியாகவே;
தாண்டினாய் கடல்தனை ராமனாய் சீதையை மீட்கவே - என்னையும்
18 தூண்டினாய் இன்று பாடல்கள் பலபல எழுதிடவே.

எழுதிய எழுத்தையும் மாற்றிட வல்லவனே
முழுதும் உன்னை உணர்ந்தவர் இல்லாதவனே
பழுதைப் பாம்பென்று நினைக்கும் மாந்தர்சிலர் - தேவதைகளைத்
19 தொழுதிடுவர் உன்னைப் பரனென்று உணராதே.

உணராதே வரம் தந்தான் மன்னன் மாவலியும்
உணர்ந்தே தடுத்திட நினைந்தார் குலகுருவும்
வளர்ந்தே அளந்தாய் ஈரடியால் அன்று மூவுலகும் -- நானும்
20 தளர்ந்தேன் உனைக் காணாது உடல் மனமிரண்டும் !

# நாரணன் நாற்பது வளரும்